

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2025) திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 3,800 கோடி ரூபாய் முதலீட்டில் 4000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா குழுமத்தின் துணை நிறுவனமான டாடா பவர் சோலார் நிறுவனம் அமைத்துள்ள 4.3 GW Solar Cell மற்றும் Module உற்பத்தி ஆலையை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மருத்துவர் கே.பி. கார்த்திகேயன், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா மற்றும் தலைமைச் செயல் அலுவலர் டிபேஷ் நந்தா, அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2025) திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2574 கோடி ரூபாய் முதலீட்டில், 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் விக்ரம் சோலார் நிறுவனம் 3 GW solar Cell மற்றும் 6 GW Module உற்பத்தி ஆலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சி. ராபர்ட் புரூஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப், ரூபி மனோகரன், நயினார் நாகேந்திரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மருத்துவர் கே.பி. கார்த்திகேயன், விக்ரம் சோலார் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ், ஹரிகிருஷ்ண சௌத்ரி, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க்யானேஷ் சௌத்ரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மதுரைக்கு மேலும் பெருமை சேர்க்க வருகிறது டைடல் பூங்கா!

## பிப்.13ல் கட்டுமானப் பணிகளை முதல்வர் துவக்கி வைக்கிறார்!

மதுரை, பிப். 7-

மதுரை மாநகருக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் புதிதாக டைடல் பூங்கா அமைய உள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகளை வருகிற 13ஆம் தேதி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைக்கிறார்

மதுரை மாநகருக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஏற்கனவே கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைய பெற்றுள்ளது. மேலும் மாநகருக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் சென்னை, கோவைக்கு அடுத்தபடியாக அனைத்து வித வசதிகளுடன் கூடிய டைடல் பார்க் அமைக்கப் படும் என தமிழ்நாடு அரசின் சட்டப்பேரவை கூட்டத்தில் கழக தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்

அதையடுத்து மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகே மாநகராட்சிக்குச் சொந்தமான 9.97 ஏக்கர் நிலத்தை டைடல் பார்க் அமைப்பதற்காக மாநகராட்சி தரப்பில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த இடத்தில் சுமார் 52 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் உள்ளிட்ட 12 தளங்களுடன் கூடிய டைடல் பார்க் அமைப்பதற்கான நிர்வாக ரீதியான பணிகள் நடந்து வந்தன, மேலும் கட்டுமான பணிக்காக சுமார் 289 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்குவதற்காக சுற்றுச்சூழல் மதிப்பீடு ஆணையமும் அனுமதி வழங்கி உள்ளது.

இந்த டைடல் பார்க் ஒரே பிளாக் என்ற அடிப்படையில் 72 மீட்டர் நீளத்திற்கு கட்டுமான மேற்கொள்ள உள்ளனர். மாநகராட்சி மூலம் 24 மணிநேரம் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அதே போன்று மறு சுழற்சி முறையில் 234 கே எல் டி தண்ணீர் உற்பத்தி செய்யப்படும், 164 எம்3 கொள்ளளவு மழைநீர் வடிகால் முறை அமைக்கப்படுகிறது. தற்போது அனைத்து முன்னேற்பாடு பணிகளும் நிறை வடைந்ததை தொடர்ந்து மதுரை டைடல் பார்க் கட்டுமானப் பணி துவக்க விழா வரும் 13ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதனை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொளி காட்சி மூலமாக கட்டுமானப் பணியை துவக்கி வைக்கிறார். அதனை தொடர்ந்து கட்டுமான பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு 18 மாதத்தில் முடிவடையுள்ளது.

இந்த டைடல் பார்க் மூலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 6000 பேர் வேலைவாய்ப்பு பெற உள்ளனர். மேலும் இந்த டைடல் பார்க் மதுரைக்கு மற்றொரு மகுடமாக அமைய உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

---

### வி.ஐ.டி.வேந்தர் கோ.விசுவநாதன் தலைமை! அமைச்சர் மா.சுப்பிரமணியன் நூல்களை வெளியிடுகிறார்!

# பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் 90 ஆம் அகவை வைர விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பொற்கிழி வழங்கி வைரவிழா மலரை வெளியிட்டு சிறப்புரை!

## அமைச்சர் பெருமக்கள் - கூட்டணிக் கட்சித் தலைவர்கள் வாழ்த்துரை!

சென்னை, பிப்,7

முதன்மை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன், பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களின் 90 ஆம் ஆண்டு அகவை வைர விழா 8.2.2025 சனிக்கிழமை அன்று காலை 9.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை சென்னை ,7 ஈ.வி.கே. சம்பத் சாலை, பெரியார் திடலில் நடைபெறுகின்றது.

இவ்விழாவிற்கு விழாக் குழுத்தலைவர் கோ.விசுவநாதன் தலைமை வகிக்கிறார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பொற்கிழி வழங்கி வைர விழா மலரை வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் இரு நூல்களை வெளியிட்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

8.2.2025 அன்று காலை9.30 மணி முதல் பகல் 12மணி வரை பெருங்கவிக்கோவின் கவிதைகளில் உலகளாவிய தமிழ்மொழி, தமிழ் எழுச்சித் தாக்கம் எனும் பொதுத் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

இசைப்பாவலன் நா.நந்தன் தமிழ்த்தாய் வாழ்த்தும், வா.மு.சே. திருவள்ளுவர் வரவேற்புரையும் ஆற்றுகின்றனர்.

விழாக்குழுத் தலைவர் வி.ஐ.டி.வேந்தர் கோ.விசுவநாதன் தொடங்கி வைக்கிறார். ஆ.இராசா எம்.பி. தலைமையும், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, டாக்டர் வி.ஜி.சந்தோசம், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மலேசிய ஆசிரியர் மணி மாணிக்கம், அருளாளர் சிவதாசன் (பிரான்சு) ஆகியோர் முன்னிலையும் வகிக்கின்றனர்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு வாழ்த்துரை வழங்குகிறார்.

கருத்தரங்கில் பேரா. முனைவர் மைக்கேல் பாரடே உலகளவில் தாக்கம் எனும் தலைப்பிலும், பேரா.முனைவர் மகாலிங்கம்தமிழ்நாட்டில் தாக்கம் எனும் தலைப்பிலும், பேரா. முனைவர் உலகநாயகி பழநி உலக நடுநிலைப்பாடு எனும் தலைப்பிலும், பேரா. முனைவர் வா.மு.சே.முத்து ராமலிங்க ஆண்டவர் உறவு, உரிமை, தாக்கம் எனும் தலைப்பிலும், பேரா. மரியசூசைஇந்திய நாட்டில் தாக்கம் எனும் தலைப்பிலும், பேரா.முனைவர் சொற்கோ கருணாநிதிதிராவிட இயக்கத் தாக்கம் எனும் தலைப்பிலும் உரையாற்றுகின்றனர்.



எஸ்.எம்.இதயதுல்லா சிறப்புரையும், வழக்கறிஞர் சிவக்குமார் நன்றியுரையும் ஆற்றுகின்றனர். மதுரகவி மறத்தமிழன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

மதியம் 12 மணி முதல் 1.30 மணி வரை பெருங்கவிக்கோவின் காலத்தை வெல்லும் கவிதை நோக்கு எனும் பொதுத் தலைப்பில் கவியரங்கம் நடைபெறுகிறது.

புலவர் பழ.தமிழாளன் வரவேற்புரையும், கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையும் வகிக்கின்றனர்.

கவியரங்கை கவிஞர் கலி.பூங்குன்றன் தொடங்கி வைக்கிறார். கவிஞர் தமிழ்தாசன்அறிமுக கவிதை வாசிக்கிறார். கவிஞர் இரவி பாரதி, கவிஞர் நா.சந்திர பாபு, பாவலர் கூத்தரசன், கவிஞர் சீனு. மோகனதாசு (புதுவை) ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கவிஞர் சிங்கம் கண்மதியன்தமிழ்ச்சமுதாய நோக்கு எனும் தலைப்பிலும், கலைமாணி ஏர்வாடி இராதாகிருஷ்ணன்புதுமை நோக்கு எனும் தலைப்பிலும், முனைவர் முகாம் இளமாறன் அறிவியல் நோக்கு எனும் தலைப்பிலும், கவிக்கோ துரை. வசந்தராசன்தொலைநோக்கு எனும் தலைப்பிலும், பேரா.தமிழியலன்சிந்தனைச் செழுமை எனும் தலைப்பிலும், கவிஞர் தன.தமிழரசன் இயற்கை எழில் எனும் தலைப்பிலும், மதுரகவி மறத்தமிழன் பெண்ணுரிமை எனும் தலைப்பிலும், கவிஞர் இளைய கோபால் இலக்கிய வளம் எனும் தலைப்பிலும், கவிஞர் புதுவை சச்சிதானந்தம்சமநிதி நோக்கு எனும் தலைப்பிலும், கவிஞர் மு.வீர முத்துகற்பனை வளம் எனும் தலைப்பிலும் கவிப்பாடுகின்றனர். கவிஞர் சிந்தை வாசன் நன்றி கூறுகிறார்.

பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4 மணி வரை பெருங்கவிக்கோவின் படைப்புகளில் விஞ்சி நிற்பது பட்டிமன்றம் நடைபெறுகிறது.

முற்றம் கவிஞர் வே.தளபதி வரவேற்புரையும், அ.மு.சு.பெ. விவேகானந்தன் (மலேசியா), உருசுவெல்ட், இரா.முகுந்தன், மாரியப்பன், (மலேசியா), வை. மா.குமார் ஆகியோர் முன்னிலையும் வகிக்கின்றனர். பேராசிரியர் சோதிவாணன் தலைமை வகிக்கிறார்.

தமிழ்வளமே எனும் தலைப்பில் பாவலர் இரா. மோகனசுந்தரமும் அருட்தந்தை முரசுராசன் (மலேசியா) பாவலர் ம.கணபதி ஆகியோரும், சமூக நலமே எனும் தலைப்பில் கவிஞர் கார்முகிலோன், கவிஞர் மதியரசு, வழக்கறிஞர் இராசுபோசு ஆகியோரும் உரையாற்றுகின்றனர்.

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழத்துரை வழங்குகிறார்.

முனைவர் சோ. கருப்பசாமி நன்றி கூறுகிறார்.

மாலை 4 மணி முதல் 5.30 மணி வரை 90 கவிஞர்களுக்கு பொன்னாடை அணிவித்து, பொற்கிழி வழங்கி, சான்றிதழ் அணிவித்துப் பாராட்டு செய்யப்படுகிறது. வழக்கறிஞர் சீ. சா. சிவக்குமார் வரவேற்புரையும், வி.ஐ.டி.வேந்தர் கோ.விசுவநான் தலைமையும் வகிக்கின்றனர்.

அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் வாழ்த்துரை வழங்குகிறார்.

டாக்டர் வி.ஜி.சந்தோசம், துரை. சந்திரசேகர், சேதுகுமணன், முனைவர் வி.முத்து, பேரா.மறைமலை இலக்குவனார். முனைவர் மதியழகன் பூங்கொடி, பொன் மீனாட்சி சுந்தரம், சாய் ரவிச்சந்திரன், பேராயர் தேவஜேயன், நெய்வேலி ஞானசேகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஆ.தருமாறன் நன்றி கூறுகிறார்.

மாலை 6.15 மணி முதல் இரவு 8.30மணி வரை நிறைவு விழா நடைபெறுகிறது. காலைமாமணி முனைவர் டி.கே.எஸ்.கலைவாணன் தமிழ்த்தாய் வாழ்த்தும் தமிழ்மாமணி வா.மு.சே. திருவள்ளுவர் வரவேற்புரையாற்றுகிறார். வி.ஐ.டி.வேந்தர் கோ.விசுவநாதன் தலைமையும், பேராசிரியர் சுப.விரபாண்டியன், முனைவர் ம.இராசேந்திரன் ஆகியோர் முன்னிலையும் வகிக்கின்றனர்.

பொற்கிழி வழங்கி விழா மலரை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிடுகிறார்.

மலரை ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., இராமமோகன் நடராசன், வா.மு.சே. கவிஅரசன் ஆகியோர் பெறுகின்றனர்.

'செம்மொழி வென்ற போர்க்களம்' 'EVERGREEN POEMS' ஆகிய நூல்களை அமைச்சர் மா.சுப்பிர மணியன் வெளியிடுகிறார்.

நூல்களை டாக்டர் வி.ஜி.சந்தோஷம், மாம்பலம் ஆ.சந்திரசேகர், குமரேசன் ஆகியோர் பெற்று கொள்கின்றனர்.

விழாவில் டி.கே.எஸ். இளங்கோவன், கு.செல்வப்பெருந்தகை, கே.எம். காதர்மொகிதீன், இரா.முத்தரசன், இரவிக்குமார் எம்.பி., வா.மு.சே. ஆண்டவர், மதுக்கூர் இராமலிங்கம், வந்தியத்தேவன், வா.மு.சே.தமிழ்மணிகண்டேன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் ஏற்புரையாற்றுகிறார்.

கவச்சிங்கம் கண்மதியன் நன்றியுரையாற்றுகிறார்.

---

### சுயஉதவிக் குழுக்களுக்கு பூச்சிக் கொல்லிகள் - உரங்களை வழங்கப் பயன்படுத்தும்

# நமோ டிரோன் தீதி திட்டம் பெண்களுக்கு பலன் அளித்துள்ளதா?

## மக்களவையில் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, பிப்.7-

**நமோ டிரோன் தீதி திட்டம் பெண்களுக்கு பலன் அளித்திருக்கிறதா? என்று நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்வி எழுப்பினார்.**

"நமோ டிரோன் தீதி திட்டத்தின் கீழ் பலன் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை என்ன?

இந்தத் திட்டத்தின் துவக்கத்தில் இருந்து வழங்கப்பட்ட மானியம் குறித்த விவரங்கள் மாநில வாரியாக என்ன?

இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று டிரோன் பைலட் உரிமங்களை பெற்ற எஸ்சி-எஸ்டி- ஓபிசி சமூகங்களைச் சேர்ந்த பெண்களின் விவரங்கள், தமிழ்நாடு உள்ளிட்ட மாநில வாரியான விவரங்கள்;

இந்தத் திட்டத்தால் பெண்களின் வருமானம், அதிகாரமளித்தல் மற்றும் விவசாய உற்பத்தித்திறனில் ஏற்பட்ட தாக்கத்தை மதிப்பிடுவதற்கு அரசாங்கம் ஏதேனும் ஆய்வு நடத்தியதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்?" ஆகிய கேள்விகளை திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எழுத்துபூர்வமாக கேட்டிருந்தார்.

**ஒன்றிய அமைச்சர் பதில்!**

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் விவசாய மற்றும் விவசாயிகள் நலன் துறையின் இணைய மைச்சர் ராம்நாத் தாகூர் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில்,

"பெண்கள் தலைமையிலான சுய உதவிக் குழுக்களுக்கு பூச்சிக் கொல்லிகள் மற்றும் உரங்களைப் பயன்படுத்துவதற்காக டிரோன்களை வழங்கும் ஒன்றிய அரசின் திட்டம்தான் நமோ டிரோன் தீதி திட்டம்.



நமோ டிரோன் தீதி திட்டம்.

2023-24 முதல் 2025-26 வரையிலான 3 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 15,000 ட்ரோன்களை வழங்கி நிலையான வணிகம் மற்றும் வாழ்வாதாரத்துக்காக உதவி செய்யும் நோக்கில் இத்திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது.

2023-24 ஆம் ஆண்டில் முன்னணி உர நிறுவனங்கள் தங்கள் உள் வளங்களைப் பயன்படுத்தி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 1094 டிரோன்களை வழங்கியிருக்கின்றன. இந்த 1094 டிரோன்களில் 500 டிரோன்கள் நமோ தீதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் கர்நாடகாவில் 145 பெண்களுக்கும், உத்திரப்பிரதேச மாநிலத்தில் 128 பெண்களுக்கும், ஆந்திராவில் 108 பெண்கள், ஹரியானாவில் 102 பெண்கள், மத்தியப் பிரதேசத்தில் 89 பெண்கள், தெலங்கானாவில் 81 பெண்கள், குஜராத்தில் 58 பெண்கள், கேரளாவில் 51 பெண்கள், தமிழ்நாட்டில் 44 பெண்கள் என்ற வகையில் டிரோன்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு வாரியம் அளித்த தகவல்படி 2023-24 ஆம் ஆண்டில் திருப்பூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவாரூர், அரியலூர், ஈரோடு, பெரம்பலூர், புதுக்கோட்டை, செங்கல்பட்டு, தேனி, நாமக்கல், ராணிப்பேட்டை, தஞ்சாவூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கடலூர், கள்ளக்குறிச்சி, வேலூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர். சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கு 44 டிரோன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் தூத்துக்குடி மாவட்டத்தில் 'கனிமொழி மகளிர் சுய உதவிக் குழு' வைச் சேர்ந்த உஷா லட்சுமி என்ற பெண்ணுக்கு டிரோன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட 44 பேர்களில் 9 பேர் பட்டியல் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். மீதமுள்ள 35 பேர் இதர பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

2023-24 ஆம் ஆண்டில் நமோ ட்ரோன் தீதி திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட 500 டிரோன்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு பெங்களூருவில் இருக்கும் வேளாண் மேம்பாடு மற்றும் கிராமப்புற மாற்ற மையத்திடம் (ADRTC) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து கிடைத்த முதல் கட்ட தகவல்கள்படி, டிரோன் பயன்படுத்துவதால் தண்ணீர் சேமிப்பு, தொழிலாளர் கூலி சிக்கனம், பூச்சிக் கொல்லி- உரம் சிக்கனம், உற்பத்தித் திறன் ஆகியவை மூலம் ஏக்கருக்கு 400 ரூபாய் லாபம் கிடைப்பதாக தெரிவித்துள்ளது" என தெரிவித்துள்ளார்.

---

# நகர்ப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி தொடர்பான ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, பிப்.7-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (05.02.2025) ஆணையர் அலுவலகத்தில் சென்னை மாநகர் மற்றும் சென்னை புறநகரில் அமைந்துள்ள திருக்கோயில்களில் நடைபெற்று வரும் திருப்பணிகளின் முன்னேற்றம் குறித்த செயல் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், 2024 2025 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி சென்னை மாநகர் மற்றும் சென்னை புறநகரில் அமைந்துள்ள 115 திருக்கோயில்களில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும், மரத்தேர், தங்கத்தேர் மற்றும் வெள்ளித்தேர் உருவாக்கம், திருத்தேர் பராமரிப்பு பணிகள், நில மீட்பு மற்றும் நில அளவை பணிகளின் முன்னேற்றம், அறங்காவலர் குழு நியமனம், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடித்திட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், திருக்கோயில்களில் காலி பணியிடங்களை நிரப்பிட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகிய பொருண்மைகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டு திருப்பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர்கள் திருமதி ந.திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி சு.ஜானகி, திரு.தி.சுப்பையா, இணை ஆணையர்கள் சி.லட்சுமணன், பொ. ஜெயராமன், திருமதி கி. ரேணுகாதேவி, திருமதி ஐ.முல்லை, உதவி ஆணையர்கள் கே.சிவக்குமார், கி.பாரதிராஜா மற்றும் செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (05.02.2025) ஆணையர் அலுவலகத்தில் நகர்புற திருக்கோயில்கள் திருப்பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆணையர் பி.என்.ஸ்ரீதர். தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி. கூடுதல் ஆணையர்கள் திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா. இணை ஆணையர்கள் உதவி ஆணையர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.